## திண்டிவனத்தில் மாபெரும் அரசு விழா!

# 1 லட்சத்து 82 ஆயிரத்து 967 பேருக்கு நல உதவிகள்!

## ‘என் கனவு – என் எதிர்காலம்’ புதிய இணையதளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



திண்டிவனம், பிப். 5-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2026) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற விழாவில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் 10,000 முகாம்கள் நிறைவையொட்டி, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், 1 இலட்சத்து 82 ஆயிரத்து 967 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட உதவித் தொகைகளையும் வழங்கினார். மேலும், இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்யும் “என் கனவு - என் எதிர்காலம்” என்ற புதிய இணையதளத்தை தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்ற பின்பு, கடந்த ஐந்து ஆண்டுகளில், அனைத்துத் துறைகளிலும் சிறந்த வளர்ச்சியை அடைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

**“உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்**

பொதுமக்கள் அதிகம் நாடும் சேவைகளை அவர்கள் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே வழங்கிடும் வகையில், **‘உங்களுடன் ஸ்டாலின்’** என்ற புதிய திட்டம், முதலமைச்சர் அவர்களால் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் 15.7.2025 அன்று தொடங்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் அனைத்து நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில், முறையே 3,768 முகாம்கள், மற்றும் 6,232 முகாம்கள் என 10,000 முகாம்கள், நவம்பர் 2025 வரை நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 முக்கியமான சேவைகளும், கிராமப்புறப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளைச் சார்ந்த 46 முக்கியமான சேவைகளும் இந்த முகாம்களில் வழங்கப்பட்டன.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில், சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக் கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வும், பிற இனங்களில் 45 நாட்களில் தீர்வும் காணப்பட்டன.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில், மொத்தம் 38.50 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, இது வரை 38.44 இலட்சம் மனுக்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் ஏற்கப்பட்ட மனுக்கள் 28.87 இலட்சம் (75%) ஆகும். விதிகளுக்கு உட்படாததாலும், நிர்வாக காரணங்களாலும் ஏற்க இயலாத மனுக்கள் 9.58 இலட்சம் ஆகும்.

இம்முகாம்களில், பெருவாரியான மக்கள் சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம், பட்டா மாறுதல், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு, வருவாய்த் துறை வழங்கும் பல்வேறு சான்றிதழ்கள், குடும்ப அட்டையில் திருத்தம், சொத்து வரி பெயர் மாற்றம், மின்னிணைப்பு பெயர் மாற்றம், அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரிய பயன்கள் போன்ற சேவைகளைக் கோரிய மனுக்கள் பெறப்பட்டு, தகுதியுடைய அனைவருக்கும் உரிய காலத்திற்குள் பயன்கள் வழங்கப்பட்டன.

இம்முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கோரி சுமார் 30 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கள ஆய்வின் அடிப்படையில், தகுதியுடைய **16.90** இலட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கடந்த டிசம்பர் **2025** முதல் வழங்கப் பட்டு வருகிறது.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் **10,000** முகாம்கள் நிறைவையொட்டி நடைபெற்ற விழாவில், காணொலிக் காட்சி வாயிலாக விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. என்.ஓ. சுகபுத்ரா, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெற்ற விவரங்கள் குறித்து எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, காணொலிக் காட்சி வாயிலாக செங்கல்பட்டு, இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலிருந்து உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இவ்விழாவில், மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**1,82,967 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு உதவித்தொகைகள் வழங்குதல்**

சமூக பாதுகாப்பு திட்ட ஓய்வூதியங்களின் கீழ், முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம், ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியம்,50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியம், முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கான ஓய்வூதியம் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மற்றும் இ-சேவை மையங்கள் மூலமாக, சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம் கோரி விண்ணப்பித்த மனுதாரர்களுக்கும், கள ஆய்வின் அடிப்படையில்,

**1.80** இலட்சம் மனுதாரர்களுக்கு (இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியம்-**1,02,960**, மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம்-**53,764**, ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம்-**22,799** உள்ளிட்டவை) ஓய்வூதியம் ஒப்பளிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் **1,82,967** பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் அடையாளமாக 8 பயனாளிகளுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணைகளை வழங்கினார். இதனால் அரசுக்கு, ஆண்டொன்றிற்கு, கூடுதலாக சுமார் ரூ.260 கோடி செலவாகும்.

தமிழ்நாட்டில், ஏற்கனவே **33,60,192** பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத்தினை இவ்வரசு வழங்கி வருகிறது. தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள **1,82,967** பயனாளிகளையும் சேர்த்து, மொத்தமாக **35,43,159** பயனாளிகள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்காக இவ்வாண்டு, 5,295 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**“என் கனவு - என் எதிர்காலம்” இணையதளத்தை தொடங்கி வைத்தல்**

தமிழ்நாட்டு மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறிய, அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக கேட்டறிந்து, அதன் அடிப்படையில் புதிய திட்டங்களை தொடங்க, **“உங்க கனவ சொல்லுங்க”** என்ற திட்டம் முதலமைச்சர் அவர்களால் 9.01.2026 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 50,000 தன்னார்வலர்களைக் கொண்டு இந்த திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது..

ஒவ்வொரு குடும்பத்தின் கனவுகளை சேகரிப்பதுடன், இளைய தலைமுறையினரின் எண்ணங்களையும் அறிந்து அவர்களின் கனவுகளை சேகரிக்க, **‘என் கனவு - என் எதிர்காலம்’** என்ற திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த திட்டத்தினை செயல்படுத்தி, இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்யும் பொருட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம், **‘என் கனவு - என் எதிர்காலம்’** என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்ய, **‘என் கனவு - என் எதிர்காலம்’** என்ற இணையதளத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். பதிவாகும் கனவுகளின் அடிப்படையில், இளைஞர் நலனிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்களின் எதிர்கால கனவுகள் நிறைவேற்றப்படும்.

இவ்விழாவில், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து. ரவிக்குமார், தரணி வேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் க. பொன்முடி, கே.எஸ். மஸ்தான், இலட்சுமணன், அன்னியூர் சிவா, மணிகண்ணன், முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதமசிகாமணி, முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் ஆணையர் கிரண் குராலா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### சமச்சீர் கல்விக்குழுவின் உறுப்பினராக இருந்து

## தமிழ்நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்!

### மூத்த கல்வியாளர் ச.சீ.இராசகோபாலன் மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 5-

**“சமச்சீர் கல்விக்குழுவின் உறுப்பினராக இருந்து தமிழ்நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மூத்த கல்வியாளர் ச.சீ,இராச கோபாலன் அவர்கள்’’ என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

மூத்த கல்வியாளர் ச.சீ. இராசகோபாலன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மூத்த கல்வியாளர் ச.சீ. இராசகோபாலன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

ஆசிரியராகத் தமது கல்விப் பணியைத் தொடங்கிய முனைவர் ச.சீ. இராசகோபாலன் அவர்கள் தமிழ்நாடு அரசு முன்னெடுத்த சமச்சீர்க் கல்விக் குழுவின் உறுப்பினராக இருந்து தமிழ்நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியிலும், மாணவர் நலனிலும் மிகுந்த அக்கறை காட்டியவர். அன்னாரது மறைவு கல்வித்துறைக்குப் பேரிழப்பாகும்.

அவருக்கு என் அஞ்சலியினைத் செலுத்துவதுடன், அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

### தமிழ்நாட்டில் – ஒன்றிய அரசு சார்பில்

## டிஜிட்டல் கல்வியறிவுக்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதா?

### மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, பிப். 5–

ஒன்றிய அரசின் சார்பில் தமிழ்நாட்டில் டிஜிட்டல் கல்வியறிவுக்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதா என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:–

1) கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், குறிப்பாக தமிழ்நாட்டில் நாடு முழுவதும் அமைக்கப்பட்ட புதிய பொது நூலகங்கள், சமூக நூலகங்கள் மற்றும் அறிவு வள மையங்களின் எண்ணிக்கையின் விவரங்கள்;

2) ஒன்றிய அரசின் உதவியுடன் புதிய நூலகங்கள் அல்லது நவீன கற்றல் வள மையங்களை அமைப்பதற்கு தமிழ்நாட்டிலிருந்து ஏதேனும் முன்மொழிவு அரசுக்கு வந்துள்ளதா;

3) அப்படியானால், அதன் தற்போதைய நிலை என்ன;

4) 2019 முதல் 2024 வரை தமிழ்நாட்டில் அதிவேக இணையம், மின் கற்றல் தொகுதிகள், டிஜிட்டல் பட்டியல் அமைப்புகள் மற்றும் ஆன்லைன் வள அணுகல் போன்ற டிஜிட்டல் உள்கட்டமைப்புடன் நூலகங்களின் எண்ணிக்கை மேம்படுத்தப்பட்டுள்ளதா

5) தமிழ்நாட்டில் டிஜிட்டல் கல்வியறிவு, மின் ஆளுமை விழிப்புணர்வு மற்றும் ஆன்லைன் கல்வி வளங்களை அணுகுவதை ஊக்குவிக்க நூலகங்கள் மூலம் ஒன்றிய அரசு ஏதேனும் முயற்சிகளை செயல்படுத்துகிறதா; மற்றும்

6) அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய காலாச்சாரத் துறை இணை அமைச்சர் கஜேந்திரசிங் செகாவாத் விரிவாக பதிலளித்தார்.

---



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி,வீரவநல்லூர் பேரூர் கழக அலுவலகம் முன்பு உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாலை அணிவித்து,மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் வீரவநல்லூர் நகர செயலாளர் சுப்பையா,ஐன்ஸ்டின் பொறியியல் கல்லூரி நிர்வாக இயக்குநர் ஆலடி அ.எழில்வாணன், மாவட்ட துணை செயலாளர் தமிழ்ச் செல்வன், பொதுக்குழு உறுப்பினர் இரா.இரவிச்சந்திரன்,வீரவநல்லூர் பேரூராட்சி தலைவர் சித்ரா,மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி,மாவட்ட வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் ச.மாடசாமி,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செ.நயினார்,வீரை முன்னாள் நகர செயலாளர் அப்துல் ரகுமான், மாவட்ட பிரதிநிதிகள் சுப்புக்குட்டி,சீவலமுத்து குமார்,மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் முத்துராமலிங்கம்,பேரூராட்சி மன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வி, தகவல் தொழில் நுட்ப அணி வீரை அண்ணாதுரை,அம்பை சரவணன் உள்பட கழக நிர்வாகிகள்,தோழர்கள் உள்ளனர்.



திருப்புவனத்தில் மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்டக் கழக துணை செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கை மாறன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் வசந்தி சேங்கைமாறன். சுப்பிரமணியன். பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. ஆகியோர் முன்னிலையில் கழக நிர்வாகிகள் பேரனியாக சென்று அண்ணாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தார்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட பிரதிநிதிகள் ஏனாதி ராமலிங்கம். லாடனேந்தல் சுப்பையா. சங்கங்குளம் ஈஸ்வரன். மாங்குடி வெங்கடேசன். பூவந்தி அக்னிராஜ். ஒன்றிய நிர்வாகிகள். ஒன்றிய அவைத் தலைவர் கலியந்தூர் இளங்கோவன். ஒன்றிய துணைச் செயலாளர் மடப்புரம் மகேந்திரன். நகரத் துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரம். மாவட்டத் தொழிலாளர் துணை அமைப்பாளர் பூவந்தி மணிகண்டன். தேளி கோபால். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுக்கரசு, நகர இளைஞரணி அமைப்பாளர் கவுன்சிலர் கண்ணன். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள். காளிதாஸ். கணேஷ்பிரபு, திருப்பதி, கணேசன், ஒன்றிய மாணவரனி அமைப்பாளர் பாண்டியர் கிருஷ்ணன். தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் புவனேஸ்வரன். ராஜ்மோகன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் அண்ணாமலை. பேரூராட்சி கவுன்சிலர்கள். வேல்பாண்டி. பத்மாவதி முத்துக்குமார். ராமலட்சுமி பாலகிருஷ்ணன். மற்றும் கிளைக் கழக வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.